## *முத்திப்பேறு பெற்ற ஹெர்மான் ஜோசப் (1150-1241)*

இவருடைய பெற்றோர் ஒரு காலத்தில் செல்வந்தராக இருந்தனர். பின்னர் ஏழைகளாயினர். இவரது ஏழாவது வயதில் பரலோகக் காட்சிகள் காணும் வரத்தை கடவுள் இவருக்கு அளித்தார். தேவதாய் மீது இவருக்கு மிகுந்த அன்பும் பக்தியும் உண்டு. தமது அவசரங்களில் தேவ தாயின் உதவியை நாடுவார். இவருக்கு வேண்டிய காரியங்களைக் கொடுத்து வந்தாள். 12-ஆம் வயதில் இவர் ஒரு சந்தியாச மடத்தில் சேர்ந்தார். குருத்துவக் கல்வியை முடித்து குருப்பட்டம் பெற்றார். திருப்பலியை இவர் மிகுந்த ஆசாரத்துடனும் பயபக்தியுடனும் நிறைவேற்றுவார். இதைப் பார்க்க மக்கள் ஆவலோடு கூடுவார்கள். மாதவின் பீடத்தின் முன் பல மணி நேரம் செலவழிப்பர். தம் பரலோக அன்னையுடன் சல்லாபித்துக் கொண்டிருந்தார். அவளுக்கு தோத்திரமாக அழகிய செபங்களையும் பாடல்களையும் இயற்றினார். இவர் எழுதிய நூல்கள் பலவற்றை ஜெர்மனி மக்கள் ஆவலுடம் படித்து வருகிறார்கள்.

**சிந்தனை:**

இவரைப்போல் நாமும் நமது அவசரங்களில் தேவதாயின் உதவியை நம்பிக்கையோடு நாடுவோமாக. இரக்கமுள்ள அந்த அன்னை நம்மைக் கைவிடமாட்டாள்.

**செபம்:**

மரியாயின் மாசற்ற இருதயமே, திருச்சபையையும் உலகத்தையும் காப்பாற்றும்.